*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 1
December -2021

# ஏழாம் வேற்றுமை உருபும் நில அடிப்படையிலான வேளாண் சமூகமும்

கணேஷ்வரி, ப.
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: pganeshwari89@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

மக்களின் உற்பத்தி நடவடிக்கை மாறும் பொழுது அதனோடே சேர்ந்து மொழியும் மாற்றம் அடைகிறது. மனித உழைப்புக்கும் மொழிக்குமான பிரிக்கவியலாத பிணைப்பில் மனித சமூகத்தின் முன்னேற்றம் அடங்கியுள்ளது. எல்லாம் மாறிக் கொண்டிருக்கிறது என்பது இயங்கியலின் தத்துவம் அனைத்தினது இயக்கத்திலும் வளர்ச்சிமாற்றம் நோக்கற்பாலது. அந்த வகையில் தமிழ்ச் சொல்லிலக்கணக் கூறுகளில் வேற்றுமை உருபுகளின் வளர்ச்சி மனித சமுதாயத்தின் உற்பத்தி நடவடிக்கையோடு தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடியது. மொழி அமைப்போடு தொடர்புடைய வேற்றுமைக் கூறுகள் மனித சமூகத்தின் வளர்ச்சிப் போக்கை மட்டுமல்லாது மொழியில் ஏற்பட்டிருக்கும் பொருள் மாறுபாட்டையும் உணர்த்தவல்லன. சொல்லிலக்கணத்தோடு சமூகத்தை உற்று ஆராய்ந்தவர் கார்த்திகேசு சிவதம்பி அவர்கள் குறிப்பாக சொல்லிலக்கணங்கள் சமூகத்தை ஆராய்ந்தவர் பேராசிரியர் உல.பாலசுப்பிரமணியன் ஆவார். இக்கட்டுரை ஏழாம் வேற்றுமை உருபு உணர்த்தக்கூடிய பொருண்மையையும், சமூக மாற்றத்தையும் ஆராய்கிறது. தொல்காப்பியம் தொடங்கி நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், முத்து வீரியம் உள்ளிட்ட சொல்லிலக்கண நூல்கள் குறிப்பிடும் ஏழாம் வேற்றுமை குறித்தும் தமிழ் சமூகத்தில் அவ்வேற்றுமை உருபு உணர்த்திய பொருண்மை அடிப்படையிலான வளர்ச்சி மாற்றங்களை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

**குறிப்புச்சொற்கள்: ஏழாம் வேற்றுமை உருபு, தொல்காப்பியம், வீரசோழியம், முத்துவீரியம்.**

**முன்னுரை**

தமிழில் பெயர்ச் சொற்களோடு இணைந்து பொருளை வேறுபடுத்திக் காட்டுவன வேற்றுமை உருபுகளாகும். இவ்வேற்றுமைகள் தமிழிலும் வட மொழியிலும் சிறப்பாக விளக்கப்படுகின்றன. தமிழில் மரபிலக்கணங்கள் வேற்றுமை இலக்கணம் குறித்தும் அதன் வகைப்பாடு குறித்தும் விளக்குகின்றன. ஏழாம் வேற்றுமை உருபான 'கண்' குறித்த இலக்கண வரலாற்றுப் பதிவுகளைச் சமூக நோக்கில் ஆராய்ந்து உரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். கால அடிப்படையிலான சொல்லிலக்கண நூல்களில் ஏழாம் வேற்றுமை உருபு குறித்துப் பகர்வனவற்றையும், அது உணர்த்தும் பொருண்மை பற்றியும் இக்கட்டுரை விவரிக்கிறது.

**வேற்றுமை**

மரபிலக்கணங்களில் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து ஆகிய நூல்கள் வேற்றுமை குறித்த செய்திகளை 'வேற்றுமையியல்' என்னும் தனிப்பிரிவில் விளக்கிச் செல்கின்றன. நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் உள்ளிட்ட நூற்கள் பெயரியலோடு இணைத்து வேற்றுமையை விளக்குகின்றன. வேற்றுமைக்கான வரையறையை விளக்கும் ப.வேல்முருகன் "தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் வேற்றுமைக்கு விளக்கம் கூறவில்லை. எனினும் அந்நூல் உரையாசிரியர்கள் 'பெயர்ப் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை' என விளக்கம் அளித்துள்ளனர். நன்னூல் (291) இலக்கண விளக்கம் (193), சுவாமிநாதம் (40), ஆகிய நூற்கள் 'பொருள் வேற்றுமை செய்வன வேற்றுமை' என விளக்கம் கூறியுள்ளன. பிரயோக விவேகம் (8) 'வடிவ மாற்றத்தை வேற்றுமை' எனக் கொள்கின்றது. ஆனால் இந்நூலின் உரையில் 'வேறுபடுதலால் வேற்றுமை, வேறுபடுத்தலால் வேற்றுமை, வேற்றுமையை முடித்தலால் வேற்றுமை' என வேற்றுமைக்கு விளக்கம் குறிக்கப்பட்டுள்ளது. தொன்னூல் விளக்கம் (55), 'வேற்றுமை படுத்தலின் வேற்றுமையாம்' என விளக்கம் அளிக்கின்றது. இலக்கண நூற்களின் கருத்துபடி 'பெயர்கள் வேற்றுமை உருபுகளால் வேறுபடுத்தப்படுதலே' வேற்றுமை என்பதை அறிய முடிகிறது"[1] என்று ஆராய்ந்துரைக்கிறார். தொல்காப்பியர் காலத்தில் வேற்றுமை குறித்த பதிவுகள் இருந்தாலும் முறையான வரையறை இல்லை. வேற்றுமைக்கான வரையறைகளும் மாறுபடுகின்றன.

**வேற்றுமையின் வகைகள்**

வேற்றுமையின் வகைகள் குறித்துத் தமிழ் மரபிலக்கண நூல்கள் மாறுபடவில்லை. ஆனால், தொல்காப்பியம் மட்டும்,

**"வேற்றுமை தாமே ஏழென மொழிப"**
**(தொல்.சொல்.நூ.63)**

**"விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே"**
**(தொல்.சொல்.நூ.64)**

என்று கூறுகிறது. மேலும்,

**"அவைதாம்**
**பெயர் ஐ ஒடு கு**
**இன் அது கண் விளி யென்னும் ஈற்ற"**
**(தொல்.சொல்.65)**

என்று பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என எட்டு வேற்றுமை உருபுகளைக் கூறுகிறார். முதற்கண் தொல்காப்பியர் வேற்றுமையை ஏழு என வரையறுப்பதால் கி.பி.5 அதற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் ஆகியன மட்டும் பயன்பாட்டில் இருந்திருக்கலாம். பின்பு 'விளி' வேற்றுமையும் இணைத்து எட்டாகக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. வீரசோழியம் வேற்றுமை உருபுகளை,

**"ஒருவ னொருத்தி பலரொன் றொடுபல வுஞ்சிறப்பின்**
**உருபுகண் மூன்று முடன்வைத்துப் பின்னெட்டு வேற்றுமையும்**
**மருவி நிறுவி யுறழ்தர வாங்கா ரகபதங்கள்**
**உருபு மலியு மறுபத்து நான்குள ஒண்டொடியே!" (வீர.நூ.31)**

என்ற நூற்பாவில் எண்வகைப் பெயரையும் சார்ந்து எட்டு வேற்றுமைகளும் வரும் எனக்குறிப்பிடுகிறது. இதற்கு உரை வகுக்கும் பெருந்தேவனார். "சாத்தன், சாத்தனை, சாத்தனால், சாத்தனுக்கு, சாத்தன் பக்கலினின்று, சாத்தனுடைய, சாத்தன்பக்கல், சாத்தனே" (வீர.ப.28) என்ற சான்றுகள் வழி, பெயர், ஐ, ஆல், கு, இன்று, உடைய, பக்கல், விளி ஆகிய வேற்றுமை உருபுகளை உய்த்துணரக் காட்டுகிறார். நேமிநாதமும் வேற்றுமையை எட்டென்றே வகைப்படுத்துகிறது. அதை,

**"காண்டகுபேர் ஐஒடுகு இன்அது கண்விளியென்**
**நீண்டுரைப்பின் வேற்றுமை எட்டாகும் -**
**மூண்டவைதாம் தோற்றும் பெயர்முன்னர் ஏழுந்**
**தொடர்ந்தியலும் ஏற்ற பொருள்செய் யிடத்து"**
**(நேமி.நூ.16)**

என்ற நூற்பா எடுத்தியம்புகிறது. தொல்காப்பியர் கூறிய எட்டு வேற்றுமைகளையும் நேமிநாதம் வழிமொழிகிறது.
நன்னூல்,

**"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்**
**வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை"**
**(நன்.நூ.291)**

என்று வேற்றுமை எட்டெனக் கூறுகிறது. "நன்னூலார் பெயரியலின் இறுதியிலேயே, வேற்றுமையை எடுத்துக்கூறுவர். வேற்றுமை கொள்வது பெயர்ச்சொல்லேயாதலின் நன்னூலார் இவ்வாறு கூறியிருக்கிறார் போலத் தெரிகிறது. ஆயின் எழுத்தியல், சொல்லியல், தொடரியல், என்று கொள்ளும் போது தொடரியலில் வேற்றுமைபெறும் முக்கியத்துவத்தை நன்னூலார் உணரவில்லைபோலத் தெரிகிறது"[2] என ஆ.வேலுப்பிள்ளை ஆராய்ந்துரைக்கிறார்.

வேற்றுமை உருபுகளின் எண்ணிக்கையைப் பொருத்த அளவில் மாற்றம் இல்லை. வேற்றுமை உருபுகளைப் பேசும் எல்லா இலக்கண நூல்களும் வேற்றுமை உருபை எட்டு என்றே கூறுகிறது. ஆ.வேலுப்பிள்ளை,"தமிழிலுள்ள வேற்றுமைப் பாகுபாடு பற்றிக் கால்டுவெல் குறை கூறுவார். தமிழ் வேற்றுமைகளை

வடமொழி இலக்கணப்படி வகுத்தனரென்றும் பொருள் நோக்கி வேற்றுமைகளை வகுத்தல், உருபுகள் நோக்கி வகுத்தல் ஆகிய இவ்விருவகையிலும் தமிழ் வேற்றுமைப் பாகுபாடு பொருந்தவில்லை என்றும் அவர் கூறுவர். தமிழ், தெலுங்கு முதலான மொழிகளில் உள்ள வேற்றுமைகள் எட்டுக்கு மேற்பட்டன, கணக்கற்றன என்பது அவர் கருத்து. பேசுவான் கருத்தை விளக்கும் முறைகளும் கருத்துவகைகளும் மிகப்பல ஆதலின், அவ்வாறு வேற்றுமைப் பொருள்கள் பல ஆதல் இயல்பே. பல்வேறு இடங்களிலும் காலங்களிலும் வளர்ச்சியை ஒட்டியும் அவற்றை உணர்த்தும் தேவையை ஒட்டியும் வேற்றுமைகள் பெருகுதல் இயற்கை, வேற்றுமையுருபுகள் பலவாதலும் திரிதலும் இயற்கையே. இந்த வகையில் நோக்கும் போதும், வடமொழியைப் பின்பற்றி, வேற்றுமைகளுக்கு முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என்பது முதலாகப் பெயரிட்டதும் தவறு என்கிறார் கால்டுவெல்”[3] என்று குறிப்பிடுவார். ஆகவே தமிழிலக்கண நூல்கள் வேற்றுமையை எட்டு என்று வகைப்படுத்தும் முறை வடமொழிச் சார்பு என்றும், தமிழில் வேற்றுமைகள் எட்டிற்கும் மேற்பட்டன என்பதையும் அறிய முடிகிறது.

தொல்காப்பியர் காலத்தே வடமொழிக் கலப்பு தமிழில் புகுந்துவிட்டது. வேற்றுமையை ஏழென வகைப்படுத்தியபின் விளியோடு சேர்த்து எட்டாக்கிக் கூறியதற்கான காரணத்தை அறிய முடிகிறது. அதைத் தொடர்ந்து மற்ற பிற இலக்கண நூல்களும் மரபைப் போற்றுவனவாய் மறுபதிப்பாகவே இருந்ததையும் அறிய முடிகிறது. வேற்றுமைகளை முறையே, முதல் வேற்றுமை – Nominative case, இரண்டாம் வேற்றுமை - Accusative case, மூன்றாம் வேற்றுமை –Instrumental case, நான்காம் வேற்றுமை –Dativie case, ஐந்தாம் வேற்றுமை – Ablative case, ஆறாம் வேற்றுமை –Genitive case, ஏழாம் வேற்றுமை –Locative case, எட்டாம் வேற்றுமை –Vocative case என்று ஆங்கிலப்படுத்துவர் மொழியியலாளர்கள்.

“ஒரு பொருளை ஒரு சொல் வினைமுதலாக்கியும், ஒரு சொல் செயப்படு பொருளாக்கியும், ஒரு சொல் கருவியாக்கியும், ஒரு சொல் ஏற்பதாக்கியும், ஒரு சொல் நீங்க நிற்பதாக்கியும், ஒரு சொல் உடையதாக்கியும், ஒரு சொல் இடமாக்கியும், வேறுபடுத்தலான் வேற்றுமை”[4] என்கிறார் அ.கி. பரந்தாமனார். “பெயர் (எழுவாய்), ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்பன அவற்றின் பெயர்களாகும். எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை, விளி வேற்றுமை என்பனவே பழம் பெயர். பின் வரிசை கருதி இவற்றை முறையே முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை எட்டாம் வேற்றுமை எண்ணிக்கை வரிசைப்படி அழைக்கலாயினர்.”[5] ன்கிறார் தமிழண்ணல்.

**அட்டவணை1**

**ஏழாம் வேற்றுமை உருபும் அது உணர்த்தும் பொருண்மைகளும்**

| நூற்கள் | வேற்றுமை உருபு | பொருண்மை |
|---|---|---|
| தொல்காப்பியம் | கண் (இடம்,நிலம்,காலம்) | - |
| வீரசோழியம் | பே, உழை, வயின், பக்கல், வழி, இல், கண் (பொருள்,இடம்,காலம், சினை, குணம்,தொழில்) | - |
| நேமிநாதம் | கண்(காலம்,வினை, செயல் இடம், நிலம்) | - |
| நன்னூல் | கண்(பொருள், இடம்,காலம், சினை, குணம்,தொழில்) | - |
| பிரயோக விவேகம் | இல், கண் | சமயோகம் - வியாபகம், அபிவியாகம், எங்கும்வியாபகம், யோகவியாபகம், விபாகயோகம் |
| இலக்கண விளக்கம் | கண் | - |
| இலக்கணக் கொத்து | இடம் | எங்குமிடம்- இடமில்லாஇடம், சுட்டிப்பரித்தல், பிரித்துச்சுட்டல், இருவரின்முடியும் ஒருவினை |
| தொன்னூல் விளக்கம் | கண் (பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்) | - |
| முத்துவீரியம் | கண் (பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், தற்கிழமை, பிறிதின்கிழமை) | - |
| சுவாமிநாதம் | கண் (பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், தற்கிழமை, பிறிதின்கிழமை) | - |

மேற்காணும் அட்டவணை 1 முறையே தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், முத்துவீரியம், சுவாமிநாதம் குறிப்பிடும் ஏழாம் வேற்றுமை உருபுகளும் அதன் பொருண்மைகளும் ஆகும். ஏழாம் வேற்றுமை உருபைத் தொல்காப்பியம் **‘கண்ணெனப்பெயரிய வேற்றுமைக் கிளவி’** எனவும், ஏழாகுவதே எனவும் கூறுகின்றது. ஆனால் பிற்கால இலக்கண நூல்கள் அனைத்தும் ‘ஏழாம் வேற்றுமை’என்றே கூறுகின்றன. இதனைத் தொல்காப்பியர்,

**“ஏழாகுவதே கண்ணெனப் பெயரிய வேற்றுமைக்
கிளவி
வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே”**

**(தொல். சொல். நூ. 81)**

**“கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடை தலை வலம் இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்”**

**(தொல். சொல். நூ. 82)**

என்ற நூற்பாவில் ‘கண்’ என்னும் முப்பொருளினும் வரும் என்கிறார்.

தட்டுப்புடைக்கண் வந்தான் - வினை செய்யிடம்

மாடத்துக்கண் இருந்தான் - நிலம்

மாரியுள் வந்தான் - காலம்

தொல்காப்பியர் கூறும் ‘கண்’ முதலான ஏழாம் வேற்றுமைப் பொருள்களை நன்னூலார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**“கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் இடப்பொரு ளுருபே”**

**(நன்.நூ.302)**

என்று குறிப்பிடுகின்றார். ஏழாம் வேற்றுமை உருபுகளாக கால் - ஊர்க்கால், கடை – வேலின் கடை இடை – நல்லாரிடைதரை – வலைத்தலை வாய் - கடல்வாய், திசை – தேர்த்திசை, வயின் - அவர்வயின், முன் - கற்றார் முன், சார் - பொழில்சார், வலம் - கைவலம், இடம் - இல்லிடம், மேல் - தலைமேல், கீழ் - நிழற்கீழ், புடை – எயிற்புடை, முதல் - இந்திரன் முதல், பின் - காதலிபின், பாடு – நும்பாடு, அளை – கல்லளை, தேம் - கொடாய்த்தேம், உழை – அவணுழை, வழி – நிழல்வழி, உழி – உற்றுழி, உளி – காவுளி, அகம் - பல்லாரகத்து, புறம் - உயிர்ப்புறத்து, இல் - ஊரில், ஆதி, பக்கல், பாங்கர், முகம், மாடு, பால், இன் முதலான உருபு சான்றாக வரும். அவன் பக்கல், காட்டுப்பாங்கர், போர்முகத்து, யாவர்மட்டும், அவன்பால், நாட்டின். இல் ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்புப்பொருள் ஏதுப்பொருளில் வந்தது. இக்காலத்தில் பக்கம், பாங்கர், மாடு, அண்டை, அருகு, அயல், ஓடு, ஓரம், நடு – சொல் உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

இடப்பக்கம் சென்றான்
சாலை ஓரம் நடந்தான்
கடல் நடுவே சென்றான்

மேலும், உல.பாலசுப்பிரமணியன் 'தொல்காப்பிய உரையாசிரியர்கள், தொல்காப்பிய சூத்திரத்தில் கூறப்பட்ட பொருள் குறித்த சொற்களை உருபுகளாகக் கூற, நன்னூலோ உருபெனவே விதந்தோதுகிறது. சங்கரநமச்சிவாயரின் உரையோ ஏழாம் வேற்றுமைகள் குறித்த பொருளை ஆறாம் வேற்றுமையின் பாற்படுத்தி விடுகிறது.'[6] என்று உரையாசிரியரின் கருத்து வேறுபாட்டை எடுத்துரைக்கிறார்.

வேற்றுமை குறித்து விரிவாக ஆராய்ந்த ப.வேல்முருகன் 'வீரசோழியம் (நூ.35) குறிப்பிடும் இவ்வேற்றுமை உருபுகள் கே, உழை, வயின், பக்கல், உழி, இல், கண் என்பனவாகும். அதன் உரையாசிரியர் முற்கூறியவற்றுடன் இடம், இடை, கீழ், மேல், புறம், முன், உள்,பின், வாய் ஆகியவற்றை இணைத்து இயம்புகின்றார். நேமிநாதம் (நூ.44) கூறும் இதன் உருபு 'கண்' என்பது இந்நூலாசிரியர். தொல்காப்பியம் எடுத்துக் கூறியவற்றையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார். இலக்கணவிளக்கம் (நூ.204) கூறும் ஏழாம் வேற்றுமை உருபு 'கண்'. இவ்வுருபு உணர்த்தும் பொருட்பயன் வகைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுவதையே முன் மொழிகின்றது. தொன்னூல் விளக்கம் (நூ.42) குறிப்பிடும் ஏழாம் வேற்றுமை உருபு 'கண்' என்பது. இந்நூல் ஏனைய நூற்களைப் போன்று இவ்வுருபு உணர்த்தும் பொருட்பயன் எடுத்துரைக்கவில்லை. பிரயோக விவேகம்(நூ.6) குறிக்கும் இவ்வேற்றுமையின் உருபுகள் 'இல்''கண்' என்பன. இதன் உரையில், இடை, கடை, மருங்கு என்பன சூழ்நிலை அடிப்படையில் பெயராகவும் உருபாகவும் அமையும் என விளக்கப்படுகின்றது.'[7] என்று ஆராய்ந்து உரைக்கிறார்.

முத்துவீரியம் **"அதன் பொருள் பொருண்முத லாறிருகிழமையின் னிடனாய்நிற்ப தென்மனார்புலவர்"** (நூ.524)

என்ற நூற்பாவில் ஏழாம் வேற்றுமை உருபு பொருள், இடம், காலம்,வினை, குணம், தொழில் எனும் ஆறு பொருட்களுக்குள்ளும் இடமாய் வரும் என்கிறது. இலக்கியங்களில் ‘கண்’ என்னும் வேற்றுமை உருபு இடத்தையும் காலத்தையும் சுட்டுவதை **“வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன் வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும்”[8]** (**புறநானூறு 18.9-1)** என்ற பாடலில் வரும் ‘கண்’ என்னும் வேற்றுமை உருபு உணர்த்துகிறது.

ஏழாம் வேற்றுமை உருபைச் சமுகக் கண்ணோட்டத்தில் விவாதிக்கும் உல.பாலசுப்பிரமணியன், ‘திணை அடிப்படையில் முதற்பொருள் நிலம், காலம் ஆகிய இரண்டு பொருள் இருந்தாலும் இவ்விரண்டிற்கும் மேலாக வினைசெய் இடம் என்று ஒரு சிறப்புப் பகுப்பு தொல்காப்பியரக்குத் தேவை பட்டிருக்கிறது. காரணம் பண்டைக் காலத்தில் - கணவாழ்கைச் சமூகத்தில் - பரந்துபட்ட நிலத்தில் வினை நிகழிடம் குறைவு , வினை நிகழாது விடந்த பரப்பு மிகுதி, வளர்ச்சி பெறும் சமூகத்தில் நிலமெல்லாம் வினை நிகழிடமாக மாறுதல் இயல்பு, பூமியை விட்டுபிற கிரகங்களிலும் மனிதன் இடம் தேடும் இக்கால நிலைமையை ஒத்தது.

தொல்காப்பியர் காலத்தில் வினை நிகழிடம் வளர் முகத்தில் இருப்பதால் அவருக்கு வினைசெய் இடம், நிலம் என்ற இருபாகுபாடு தேவைப்படுகிறது. உரையாசிரியர்கள், நன்னூலாரின் காலமோ தொல்காப்பியரின் காலத்தை விட வளர்ச்சி பெற்று, வினையும் வினைசெய் இடமும் பல்கிப் பெருகிவிட்டதால் அப்பகுப்பு நன்னூலாருக்குத் தேவைப்படவில்லை. உரையாசிரியர்கள் இப்பகுப்பைத் தொல்காப்பியரின் நிலைநின்று அணுக வேண்டிய கட்டாயத்தில் அணுகி, வினைசெய் இடம், நிலம் என்ற இரண்டை ஒன்றாக்குகிறார்’[9] என்று ஆய்ந்துரைக்கிறார். நம் இந்தியச் சமூகம் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வோளாண் சமூகம் ஆகும். தமிழ் மரபிலக்கணங்கள் கூறும் ஏழாம் வேற்றுமை உருபு நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தின் இயங்கியல் தன்மையைப் பிரதிபலிக்கிறது.

**முடிவுரை**

கண் வாழ்க்கையினின்றும் மீண்டெழும் நிலமானிய அடிமைச் சமூக, மன்னராட்சிக் காலகட்டத்தில் மொழியில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களுக்கு வரலாறும், அடிக்கட்டுமான உழைப்பினால் விளைந்த பல்வேறுபட்ட சமூகச் சூழலும் வேற்றுமை உருபுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. எனவே அவை எல்லாச் சமூகச் சூழலிலும் புதுப்புதுச் சொற்களை உருவாக்கிக் கொண்டும், அச்சொற்கள் வழங்கும் சூழலுக்கேற்பப் பொருண்மையை உணர்த்திக் கொண்டும் விரிந்தன. குறிப்பாக ஏழாம் வேற்றுமை உருபு தொடக்கத்தில் வினை நிகழிடத்தைக் குறித்ததையும், வளர்ச்சி பெற்ற சமூகத்தில் நிலமெல்லாம் வினை நிகழிடமாகத் திரிந்த இயல்பையும் பிரதிபலிப்பதை அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் உரையும், பாடல்.18
2. தமிழண்ணல், நன்னூல், சொல்லதிகாரம், ப.71
3. பரந்தாமனார், ஆகி நல்ல தமிழ் எழுத வேண்டுமா? ப. 78
4. பாலசுப்பிரமணியன், உ ல சொல்லிலக் கணங்களும் சமூக உறவுகளும், ப.94
5. வேல்முருகன், ப.தமிழ் மரபிலக்கணங்களில் இடைச்சொற்கள், ப.44
6. வேலுப்பிள்ளை, ஆ தமிழ் வரலாற்றிலக்கணம். ப. 184
7. வேல்முருகன், ப. தமிழ் மரபிலக்கணங்களில் இடைச் சொற்கள், ப.73
8. வேலுப்பிள்ளை, ஆ தமிழ் வரலாற்றிலக்கணம். ப. 188